**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி—

" மானியக் கோரிக்கை எண் 48 — வேளாண்மை குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 7,00,42,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் ".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று. நாளை 9-3-1982-ந் தேதி காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை இரவு 6-56 மணிக்கு ஒத்தி வைக்கப்பெற்றது.

### 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

#### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

122. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு ஊராட்சிகள் விதிகளை (பெண்களுக் கான எண்ணிக்கை மற்றும் இட ஒதுக்கீட்டினை நிர்ணயித்தல்) உருவாக்குவது குறித்து 28-10-1981-ம் ஆண்டு ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித் துறையின் 1794 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1958) 199 (2) பிரிவின்கீழ்] பேரவைமுன் வைக்கப் பெற்றது.

#### ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள் ஏனைய தாள்கள்.

63. கோரிக்கை எண் 20—வேளாண்மை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு 1982-83 (தமிழ், ஆங்கிலம்).

64. 1982-83-ஆம் ஆண்டில் வேளாண்மைத்துறை பற்றிய செயல்வினை முறைத் திட்டம் (தமிழ், ஆங்கிலம்).

65. தமிழ்நாடு வேளாண் தொழில்கள் கழகம் பற்றிய ஆய்வுரை 1981-82 (தமிழ், ஆங்கிலம்).

66. தமிழ்நாடு அரசு பண்ணைகள் கழகம் பற்றிய ஆய்வுரை 1981-82 (தமிழ், ஆங்கிலம்).

67. வேளாண்மையில் சாதனைகளும், குறிக்கோள்களும் என்கிற சிறு புத்தகம் (தமிழ்).

68. 'பயிற்சி மற்றும் தொடர்பு வழித்திட்டம்' என்கிற சிறு புத்தகம் (தமிழ்).